# பண்ணாரிஅம்மன் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்



**புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி முதன்மை அலுவலர் ஏ.எம்.நடராஜன், முதல்வர் த.சரவணன், கன்கார்டு நிறுவன இயக்குநர் ஜி.அனுஷா உள்ளிட்டோர்.**

**சத்தியமங்கலம், டிச. 25:** பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரியுடன் சென்னை கன்கார்டு நிறுவனம் இணைந்து சென்டர் ஆஃப் எக்ஸலென்ஸ் மையம் துவங்கியுள்ளது. இதில் கட்டடவியல் ஆலோசனை வழங்க இரு நிறுவனங்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இக்கல்லூரியில் பயிலும் கட்டடவியல் துறை மாணவர்களுக்கு பாடத்துடன் நவீன சோதனைக் கருவிகளுக்கான செயல்விளக்கப் பயிற்சி, நடைமுறை தொழில்நுட்பம், கட்டுமானப் பொருள்கள் சார்ந்த வழிகாட்டல் உள்ளிட்ட தொழில்நுட்பங்களை வழங்க இந்நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரு நிறுவன அதிகாரிகளும் கையெழுத்திட்டனர். இதில் பண்ணாரிஅம்மன் கல்லூரி முதன்மை அலுவலர் ஏ.எம்.நடராஜன், முதல்வர் த.சரவணன், கட்டடவியல் துறைத் தலைவர் ஜி.அனுஷா, கன்கார்டு நிறுவன இயக்குநர் உமா கிருஷ்ணகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.